இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

திறமை வாய்ந்த மனத்திடமுள்ள மனையாளைக் காண்பது மிக மிக அரிது; அவள் பவளத்தை விடப் பெருமதிப்புள்ளவள். அவளுடைய கணவன் அவளை மனமார நம்புகிறான்; அவளால் அவனுக்கு நலமும் வளமும் பெருகும். அவள் தன் வாழ்நாள் முழுவதும் அவனுக்கு நல்லதையே செய்வாள்; ஒருநாளும் தீங்கு நினையாள். கம்பளி, சணல் ஆகிய பொருள்களைத் தானே தேடிக் கொணர்வாள்; தன் வேலை அனைத்தையும் விருப்புடன் தானே செய்வாள். (நீதிமொ 31: 10-13)

# பல்சமய உரையாடலுக்கான திருஆட்சி பீட பேரவையின் தீபாவளி வாழ்த்துச் செய்தி.

வத்திக்கானின் பல்சமய உரையாடலுக் கான திருஆட்சி பீட பேரவை, அதன் அன்பான தீபாவளி வாழ்த்தினை அனைத்து இந்து சமயத்தாருக்கும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கிறது.

அச்செய்தியில், இந்த ஆண்டு நவம்பர் திங்கள், 14-ஆம் தேதி கொண்டாடப் படும் தீபாவளி கொண்டாட்டமானது கோவிட் -19 தொற்றுநோயின் சிரமங் களுக்கு மத்தியில் கொண்டாடப்படுவது பெரும் சவால் மிகுந்த ஒன்றாக இருந்தாலும், இது மிகவும் அர்த்தமுள்ள தாக உள்ளதை ஏற்க வேண்டியுள்ளது.

பல சமயத்தாரிடையே நெருங்கிய உரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் வழி பாசத்திற்குரிய நமது பாரம்பரியத்தைத் தொடரும் வகையில், இந்த பெருநாள் வாழ்த்தானது தீபாவளிக்கான இருபத் தைந்தாவது செய்தியாக வெளிவருகிறது. இதனால் நமது சமயங்களுக்கிடையில் உள்ள நல்ல மரபுகள், பண்புகள் ஆகியவற்றை மதிக்கவும் பேணிக்காக் கவும், பாராட்டவும் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இது ஒரு படியாக அமைகிறது என்றால் மிகையாகாது.

நம் மத்தியில் பல ஆண்டுகளாகத் தொடரும் இந்து-கிறிஸ்தவ உரையாடலை மேம்படுத்தி ஊக்குவிப்பதன் வாயிலாக பல்வேறு நிலைகளில் நல்லிணக்கத்திற்கு வழிவகுக்க முடிகிறது. மேலும், இந்துக் களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையில் நெருங்கிய உறவினை உருவாக்குதலும், வளர்ப்பதும்,மேம்படுத்துதலும் நமது நன்மைக்காகவும், மனிதகுலத்தின் நன்மைக் காகவும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான ஒரு வழியாக உள்ளது.
இந்த ஆண்டு, கோவிட் -19 தொற்றுநோயின் காரணமாக, எங்கள் சிந்தனையில் உதிக்கும் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். அவற்றுள், நம் மக்கள் மத்தியில்




எதிர்காலத்திற்கான நம்பிக்கையை ஊக்கு விக்க வேண்டியதன் அவசியமும், எதிர்மறையான எண்ணங்கள், சமாளிக்க முடியாத தடைகள், சமூக-பொருளாதார, அரசியல், ஆன்மீகச் சவால்கள் மற்றும் பரவலான கவலை, நிச்சயமற்ற தன்மை மற்றும் அச்சம் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, மக்கள் மனதில் நம்பிக்கையை ஆழப்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும்

அவ்வாறு செய்வதற்கான நமது முயற்சிகளில் நிச்சயமாக நம்மைப் படைத்த கடவுள் ஒருபோதும் நம்மை கைவிட மாட்டார். ஒருவகையில் இந்த கோவிட் -19 தொற்றுநோய் நம் மத்தியில் விழிப்புணர்வும் ஒன்றிணைந்த செயல் பாட்டுக்கும் வழிவகுத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. இந்த துன்பச் சூழலில் கிடைக்கப்பெறும் அனுபவமும், பொறுப் புணர்வும் தேவையில் உள்ளோருக்கு உதவிடும் மனிதாபிமானத்தை வளர்த் துள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதைப்போல, "நமது இந்த ஒன்றிப்பானது, இன்று இந்த தொற்று நோய்க்கு அடுத்து உலகத்தின் சமூகக் கேடுகளைக் குணப்படுத்தி நெருக் கடியிலிருந்து வெளியேறக்கூடிய நல்ல பாதையை நமக்குக் கற்றுத்தந்துள்ளது. மேலும், நமது சமயங்களில் காணப்படும் மரபுகள் நம்மத்தியிலும் நிலவும் வேறுபாடுகள் மத்தியிலும் நல்லணக் கத்தோடு இந்த நெருக்கடி காலக் கட்டத்தில் ஒன்றித்து வாழும் பண்புகளைக் கற்றுத்தந்துள்ளன.

இந்த சமய மரபுகள் மற்றும் சமய போதனைகளின் அடிப்படையில், நம்மில் ஊன்றப்பட்ட அறநெறிகள் மற்றும் நமது மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்பு, கிறிஸ்தவர்களாகவும் இந்துக் களாகவும் பயணிக்கும் நம் அனைவரையும் ஒரு நேர்மறை எண்ணம் கொண்ட மக்களினத்தைக் கட்டி எழுப்ப அழைக் கிறது.

உங்கள் அனைவருக்கும் எங்களது அன்பு நிறைந்த தீபாவளி வாழத்துக்கள் உரித்தாகுக.

இப்படிக்கு,

தலைவர்
Miguel ɒngel Cardinal Ayuso Guixot,
MCCJ President
செயலர்,
Rev. Msgr. Indunil Kodithuwakku Janakaratne Kankanamalage

# கூலிம், திருஇருதய ஆண்டவர் பங்கில் புதுநன்மை கொண்டாட்டம்

**கூலிம்**: இங்குள்ள திருஇருதய ஆண்டவர் பங்கில், ஒன்பது தமிழ் பேசும் மறைக்கல்வி மாணவர்களுக்கு புதுநன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டது. கடந்த அக்டோபர் 25-ஆம் திகதி கொண் டாடப்பட்ட பங்குத் திருப்பலியில் அருள்தந்தை ஹென்றி ராஜு அவர்கள் இந்த அருளடையாளத்தை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

புகுமுக அருளடையாளங்களில் இரண் டாவது அருளடையாளமாக விளங்கும் நற்கருணைதான் நமது கிறிஸ்தவின் வாழ்வின் அனைத்திற்கும் உச்சமாகவும் ஊற்றாகவும் திகழ்கிறது என்பது கடந்த சில வருடங்களாக மறைக்கல்வி வழி இவர்களுக்கு நன்கு உணர்த்தப்பட்ட நிலையில், இவர்கள் மகிழ்ச்சியோடு முதல் நற்கருணையைச் சுவைத்தார்கள்.



இந்த கோவிட்-19 தொற்று காலத்தில், ஒன்பது மாணவர்களுக்கும் புதுநன்மை கொண்டாட்டத்தை நிறைவேற்றிய பங்கு அருள்தந்தைக்கும், பெற்றோர் களுக்கும், திருவழிபாட்டு குழுவினருக் கும் மறைக்கல்வி பணிக்குழு அதன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டது. இவர்கள் என்றும் இயேசுவே எனது ஆண்டவர், அவரே எனது ஒளியென்று ஏற்று வாழும் சாட்சிய வாழ்வுக்குத் தயாராகிவிட்டனர்.

## புனித இரண்டாம் ஜான் பவுல் அவர்களுடனான தமது நினைவலைகளைப் பகிர்கிறார் கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ்

(தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட தொடர் கட்டுரை)

### 2. ஒரு நோக்கத்திற்காக -இரண்டாம் ஜோன் பவுல் மேற்கொண்ட திருத்தூதுப் பயணங்கள்.

கடந்த 12, ஜூன் 2003 -ஆம் நாள், தமது 100-வது திருத்தூதுப் பயணத்தை முடித்துக்கொண்டு, திருத்தந்தை ஜோன் பவுல் கூறியதாவது, "கடந்த 16, அக்டோபர் 1978 -ஆம் நாள் நான் திருத்தந்தையாகத் தேர்வுச் செய்யப்பட்ட முதல் நாள், இயேசுவின் கட்டளையான. 'உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்' (மாற்கு 16:15) என்பது என் உள்ளத்தின் ஆழத்தில் ஓர் உடனடித் தேவையாக எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

நான் அது என் கடமை என உணர்ந்தேன். எனவே, எல்லா ஊர்களுக்கும், சென்று வந்த (திப 9:32) திருத்தூதர் பேதுருவைப் பின்பற்றி, திருஅவையைக் கட்டி எழுப்பவும், திடப்படுத்தவும், வார்த்தைக்கும் உண்மைக்குமான பணிக்கும், திருஅவையின் அவசியத்தை உணர்த்தவும், அனைவரையும் கடவுள் அன்பு செய்கிறார்; என்பதை எடுத்துரைத்து, அவர்களிடமிருந்து ஊக்குவிப்பையும் அவர்களின் நன்மைத் தனத்தின் எடுத்துக் காட்டுகளையும், நம்பிக்கையையும் பகிரவும் விழைகிறேன்" என்றார்.

129 நாடுகளுக்கான அவரது 104 பயணங்களும் இத்தாலிக்கான 146 திருத்தூதுப் பயணங்களும் அவரது சாட்சியத்தை உறுதிப்படுத்துகிறது.

### 3. துன்புற்ற பள்ளி வாழ்வு என் வாழ்வை வடிவமைத்தது

20 வயதிலேயே தமது பெற்றோரையும் ஒரே சகோதரரையும் இழந்ததன் காரணமாக, இளம் வயதிலேயே இந்த வருங்கால திருத்தந்தை ஜோன் பவுல் பெரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருந்தது.

1929 ஆண்டு, ஏப்ரல் 13-ஆம் திகதி பள்ளியிலிருந்து இல்லம் திரும்பிய இவரிடம், சற்றும் எதர்பாராதச் செய்தியாக, அண்டை வீட்டார் இவரது தாய் வயது 45, மரணமுற்றதாகத் தெரிவித்தனர். அப்போது கரோலுக்கு (ஜோன் பவுல்) வயது எட்டு.

அவரது மூத்த சகோதரர் என்மண்ட் 1930-ல் ஒரு மருத்துவரானார். ஈராண்டுக்குப்பின், 1932, டிசம்பர் 5-ஆம் நாள் அவர் தமது நோயாளிகளில் ஒரிவரிடமிருந்து தொத்தியக் காய்ச்சல் காரணமாகப் போலந்தில், பியஸ்கோ-பியாலா மருத்துவமனையில் காலமானார்.



*புனித திருத்தந்தை 2-ஆம் ஜோன் பவுல்*

1941-ல், குளிர்காலத்தில் , கரோலின் தந்தை கடும் நோயிற்குளானார். அதே வருடம் பிப்ரவரி 18, இரசாயன தொழிற்சாலையிலிருந்து வேலை முடிந்து வீடு திரும்பிய வேளை, படுத்தப்படுக்கையில் இருந்த அவரது தந்தை மாரடைப்பால் காலமானதைக் கண்டார். அப்போது அவருக்கு வயது அறுபத்து இரண்டு.

பின்னர் ஒரு சமயம் பிரான்ஸ் தேச எழுத்தாளரான அண்ரு ப்ரோசட் அவர்களிடம், "எனது இருபதாம் வயதிலேயே நான் அன்பு செய்த அனைத்து மக்களையும் இழந்து விட்டேன் என்று வருந்தக் கூறினார். அன்று இரவு முழுவதும் முழங்காலிலிருந்து செபித்த வண்ணம் தந்தையின் உடலைக் காத்திருந்தார் இன்றைய புனிதர் திருத்தந்தை ஜோன் பவுல்.

*-தொடரும்* *-ஆர்.கே.*

## சென்னையில் வீரமாமுனிவர் பிறந்த நாளில் சிறப்பு மரியாதை

இத்தாலி நாட்டு மறைப்பணியாளரான, இயேசு சபை அருள்பணியாளர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி (Constantine Joseph Beschi) என்ற இயற்பெயரைக்கொண்ட வீரமாமுனிவர் அவர்கள் (நவ.8, 1680 - பிப்.4, 1747) பிறந்த நாளில், தமிழக இயேசு சபையினர் அவரை சிறப்பாக நினைவுகூர்ந்து, அவர் தமிழுக்கும், திருஅவைக்கும் ஆற்றிய அரும்பணிகளை எடுத்துரைத்தனர்.

கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் என, பன்முகத் திறமைகளைக் கொண்டிருந்த இவர், தமிழ் உரைநடையின் தந்தை எனவும் அழைக்கப்படுகிறார்.

## 'நான்காவது உலக ஏழையர் தினம்' திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கும் செய்தியின் சுருக்கம்

### ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடு (சீராக் 7:32)

இன்று நவம்பர் திங்கள் 15-ஆம் திகதி, உலக ஏழையர் தினம் நான்காவது ஆண்டாக நினைவுகூரப்படுகிறது. **'ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடு'** என சீராக் 7:32-ல் கூறப்பட்டுள்ள இறைவார்த்தையை மையக்கருத்தாகக் கொண்டுள்ள இவ்வருட ஏழையர் தினம், பலநிலைகளில் காணப்படும் வறுமை, ஏழ்மை ஆகியவற்றை சிந்தித்துப் பார்க்கவும் அவற்றைக் களைய வழிவகைக் காணவும் நம்மை அழைக்கிறது.

“மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்” (மத் 25:40) எனும் இயேசு கிறிஸ்துவின் வாரத்தைக்கு ஏற்ப, ஏழைகளுக்கு உதவும் ஏழைக்ளுக்குச் சேவை செய்யும் போதுதான் நம்மில் அதிகம் ஊற்றெடுக்கிறது. ஏழைகளுக்கு உதவுவது என்பது காலத்திற்கோ, தனிமனித முடிவுக்கோ கட்டுப்பட்ட ஒன்று அல்ல. கடவுளின் அருளானது நமது சுயநலத்திற்கு உரியதல்ல.

ஏழைகள் மட்டில் அக்கறை என்பது ஒரு சவால். அவர்களது துன்பத்தை, துயரத்தை எவ்வாறு களைவது என்பது நமக்கான சவாலாகும். கிறிஸ்தவ சமூகம் இந்தப் பணியில் ஈடுபடவும், அதை மற்றவர்கள் தோளில் சுமத்த முடியாது என்பதை ஏற்கவும் அழைக்கப்படுகிறது. சமூகத்தில் அடுத்திருப்பவர் வறுமையின் பிடியில்



சிக்கித் தவிக்கையில், நமக்கென்ன என்றிருக்க முடியது.

பல ஏழை ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் மௌனமாக அழும் வேளையில், எப்போதும் கடவுளின் மக்களாகிய நாம் உதவிட முன்னணியில் நிற்க வேண்டும்.

நமது உதவிடும் கரங்கள் ஏழைகள் மட்டில் நமது நெருங்கிய ஒன்றிப்பையும், அன்பையும் வெளிப்படுத்தும் அடையாளமாக உள்ளன. இந்த கோவிட்-19 தொற்று காலத்தில் அவதியுறும் மக்களுக்கு எந்தளவு நாம் உதவிடும் கரங்களாகத் திகழ்தோம்?

'எல்லாவற்றிலும் உன் முடிவை நினைவில் கொள்' (சீராக் 7:36). இந்த ஏழைகளுக்கான பணி வாழ்வுப் பயணத்தால் இறைவனின் தாய் அன்னை மரியா நம்மோடு இணைந்திருக்கிறார். ஏழைகளின் தாயான மரியாவிடம் நாம் ஒப்புவிக்கும் இறை வேண்டலானது, நம்மை கிறிஸ்துவின் பெயரில் அவர்களுக்குச் சேவை செய்யும் அனைவருடனும் ஒன்றிணைக்கட்டும். நமது கரங்கள் அனைத்து ஏழைகளையும் அரவணைக்கட்டும்.

உண்மையில் ஆண்டவரின் ஆசீர் வேளையில் அவர்களில் உள்ள இயேசுவை நாம் சந்திக்கிறோம்.

இத்தருணத்தில் சீராக் நூலில் காணப்படும் ‘ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடு’ என்பதானது அந்நியர் ஆதிக்கத்தில் துன்புற்ற இஸ்ரயேலருக்கு கடவுள் உரைத்த அறிவுரையாகும். “உள்ளத்தில் உண்மையுள்ளவனாய் இரு; உறுதியாக இரு; துன்ப வேளையில் பதற்றமுடன் செயலாற்றாதே. ஆண்டவரைச் சிக்கெனப் பிடித்துக்கொள்; அவரை விட்டு விலகிச் செல்லாதே” (சீராக் 2:2-3) என்று கூறப்பட்டுள்ளது.

கடவுளோடான இறைவேண்டலையும் ஏழைகள் மட்டில் காட்டப்பட வேண்டிய இரக்கத்தையும் ஒருமைபாட்டையும் பிரிக்க முடியாது. கடவுளுக்கான வழிபாட்டில் ஒவ்வொரு மனிதரும் கடவுளின் சாயல் என்பதை மறக்கவோ மறுக்கவோ இயலாது. ஏழைகளைப் புறக்கணித்து வழிபாடும் இறை வேண்டலுக்கும் செலவிடப்படும் நேரம் விழலுக்கிறைந்த நீர்போலாகும்.

## கடின உழைப்புக்கு மாற்று இல்லை

இன்றைய வாசகங்கள் அனைத்தும் தனித்தனியாகப் பார்த்தோமென்றால், இல்லத்திலுள்ள மனைவியைப் பற்றியும், தெசலோனிக்க மக்கள் எப்போதும் விழிப்பாய் இருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் நற்செய்தியில் பணியாளர்களைப் பற்றியும் விவரிப்பது போல் உள்ளது. ஆனால் இந்த மூன்று வாசகங்களுக்கும் இழையோடியிருக்கும் ஒரு முக்கிய மற்றும் தலையாயச் செய்தி என்னவென்றால், இறைவன் அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட திறமைகளைப் புதைத்து வைக்காமல், பயன்படுத்தவும், அதை தனக்கென்று வைத்துக்கொள்ளாமல் தேவையில் இருப்போரிடம் பகிர்ந்துகொண்டு வாழவும், அவ்வாறு வாழும் காலத்தில் ஆண்டவரின் வருகைக்காக எப்போதும் தயாராய் விழிப்போடும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.
நீதிமொழிகள் புத்தகத்தில் மனத்திடமுள்ள மனையாளைக் காண்பது மிக அரிது என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் நல்லதையே செய்பவர்களாகவும், தனக்குத் தேவையான அனைத்தையும், தானே தேடிப்பிடித்து நிறைவேற்றுபவளாக, எளியவனுக்கு உதவி செய்யவும், பசியுற்றோருக்கு உணவளிக்கவும், தம் கையை நீட்டுபவளாகவும் இருப்பவளே திறமை வாய்ந்தவள் என்று நீதிமொழி புத்தகத்தின் ஆசிரியர் கூறுகிறார். இவள் செய்யும் ஒவ்வொரு நற்செயலும், தாம் பெற்றுக்கொண்ட திறமைகளைப் பன்மடங்காக்கி அதனால், எப்போதும் தயார்நிலையில் இருந்து தம் பொறுப்புகளை செய்யும் முன்மதியுள்ள பெண்ணாகத் திகழ்கிறாள்.

இரண்டாம் வாசகத்தில் ஆண்டவருடைய நாள் நினையாத நேரத்தில் வரும்; ஆகவே இருளில் நடக்கும் மக்களாக இராமல், ஒளியில் நடக்கும் மக்களாக வாழ திருத்தூர் பவுல் அழைக்கிறார். இருள் என்பது இங்கு பாவ வாழ்க்கையையும், ஒளி அல்லது பகலில் நடப்பது பாவத்தைவிட்டு விலகிய வாழ்க்கையாகவும் நாம் பார்க்கலாம். இப்போது வரும்; அப்போது வரும் என்று அஞ்சி நடுங்காமல், நம்முடைய அன்றாடக் கடமைகளை ஆண்டவரின் விருப்பத்துக்கேற்ப செய்யும்போது, ஆண்டவரின் வருகை நமக்கு அச்சத்தைத் தராது. எப்போது கதவு திறக்கும் என்று ஆவலாய் காத்துக்கொண்டிருப்போருக்குக் கதவு திறக்கப்பட்டதைப் போல தயாராய் மகிழ்ச்சியோடு உள்ளே நுழைவோம்.

ஆண்டவர் இயேசுவின் உவமையில் நாம் பார்க்கும் பணியாளர்கள் இருவரையும் தலைவர் ஒரே தரத்தில் தான் வைத்துப் பாராட்டுகிறார். "நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே... என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்" என்று ஒரே மாதிரியான வாழ்த்தைத் தான் தலைவர் தருகிறார்.

நம்ஆண்டவராகிய இயேசு நமக்கென விட்டுச் சென்ற அனைத்து தாலந்துகளும் நாம் இலவசமாகப் பெற்றுக்கொண்டப் பரிசுகள். அவற்றை அறியாமை என்னும் இருளில் புதைத்துவிடாமல், பொதுநலத்திற்காக பாதுகாத்து, வளர்த்துப் பிறரும் பயனடையும்படியாக வாழ்வோக்குவோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ. சிரம்பான்*

**பொதுக்காலத்தின்33-ஆம் ஞாயிறு**
நீதிமொ 31: 10-13, 19-20, 30-31
திபா 128: 1-2. 3. 4-5 6
1 தெச 5: 1-6
மத் 25: 14-30
**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாலம் I**